# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1467/14 - 2006 ඔක්තෝබර් 17 වැනි අඟහරුවාදා - 2006.10.17

1467/14 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டம்

**7 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள, அதிகாரங்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வி, போக்குவரத்து உல்லாசத்துறை, வர்த்தக வாணிப, கலாசார, சுற்றாடல், காணி வீடமைப்பு, நிர்மாணம், மனிதவள அபிவிருத்தி, உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய நான், கீழ்க் குறிப்பிட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரி விகிதங்களை இக்கட்டளை மூலம் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு/01.11.2006 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் விதித்துரைக்கிறேன்.

| | | |
|---|---|---|
| (அ) | அரியப்பட்ட மரங்கள் அல்லது மரக்குற்றிகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் | நூற்றுக்கு 05 |
| (ஆ) | பெறுமதி வாய்ந்த அல்லது அரைவாசி பெறுமதிவாய்ந்த கற்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவுவரி தொடர்பில் | நூற்றுக்கு 05 |
| (இ) | தங்கம் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவுவரி தொடர்பில் | நூற்றுக்கு 05 |
| (ஈ) | வீட்டுத்தளபாடங்கள் (உருக்கினாலான தளபாடங்கள் உட்பட) கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் | நூற்றுக்கு 05 |
| (உ) | தங்க நகைகள் மற்றும் ஆடைத்தொகுதிகளுக்கான தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவுவரி தொடர்பில் | நூற்றுக்கு 05 |
| (ஊ) | சாராயம் (பதப்படுத்தப்பட்ட சாராயம் கலக்கப்பட்ட சாரயம் உட்பட) பியர், வைன், கள்ளு மற்றும் ஏனைய இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபான வகைகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவுவரி தொடர்பில் | நூற்றுக்கு 02 |

(எ) சிகரட் உற்பத்தியாளரிடமிருந்து அல்லது சிகரட் இறக்குமதியாளரிடமிருந்து சிகரட்டுக்களைக் கொள்வனவு செய்து சிகரட்டுக்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு வரி தொடர்பில் — நூற்றுக்கு 02

(ஏ) மேலே (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பவற்றின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு வியாபாரத்தைத் தவிர்ந்த ஏனைய பொருட்களை அல்லது பண்டங்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரங்களின் விற்பனை வரவு தொடர்பில் — நூற்றுக்கு 01

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதி நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 642/18 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் அக்கட்டளையில் செய்யப்பட்ட திருத்தங்கள் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு /2006.11.01 ஆந் திகதி தொடக்கம் இக்கட்டளை செயற்பட்டதன் பின்பு ஏற்படும் ஏதாவதுதொரு மொத்த விற்பனை வரவு வரி தொடர்பிலான ஏற்புடைமை இல்லாதொழிதல் வேண்டும்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, கல்வி, போக்குவரத்து உல்லாசத்துறை, வர்த்தக வாணிப, கலாசார, சுற்றாடல், காணி வீடமைப்பு, நிர்மாணம், மனித வள அபிவிருத்தி, உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான அமைச்சர்,
மத்திய மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்தி மாகாண சபை,
2006, ஒற்றோபர் 13,

11-68